தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 8-9-1982 காலை 9 00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·49 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

79. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 11-5-1982-ஆம் தேதியிடப் பெற்ற 1146-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

80. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சமய நிறுவனங்கள் (காப்பு முதலீடுகள், டணம் கடன் வழங்குதல் அல்லது பெறுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-4-1982 ஆம் தேதியிடப் பெற்ற 394 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரம் எடுத்துச்செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத் துறையின் 27-11-1981ஆம் தேதியிடப் பெற்ற 1376 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

82. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 8-4-1982 ஆம் தேதியிடப் பெற்ற 528 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

83. தேசியமயமாக்கப் பெற்ற வங்கிகள் மூலம் வசூலிக்கப் பெறும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பெறாத வண்டிகளுக்கான வரியினை திருநெல்வேலி மாவட்டம் சாத்தான் குளத்திலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளைகள் மூலம் வசூலிப்பது குறித்து உள்துறையின் 19-6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1580 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் /வரி விதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

84. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கையும் பெரம்பலூர் சர்க்கரையின் ஆலையின்(வரையறுக்கப் பெற்றது) 1981 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டறிக்கையும்)தமிழ், ஆங்கிலம்) (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்திய சட்டம் 1/1956) 6 9ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

12. 1-4-1979 முதல் 31-3-1980 முடிய தமிழ்நாடு ஒழுக்க கண்காணிப்பு ஆணைக்குழுவின் 14வது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS